## உண்மையில் நடந்தது என்ன?

# ‘மிசா’ அடக்குமுறை: கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கைதும் சர்ச்சைகளும்!

## ‘சன் நியூஸ்’ தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியில் – தோழர் தியாகு – விடுதலை ராஜேந்திரன் விளக்கம்!

சென்னை, செப்.14-

**சன் நியூஸ் தொலைக்காட்சியில் மு.குணசேகரனை நெறியாளராகக் கொண்டு நடைபெற்ற சிறப்பு விவாத நிகழ்ச்சியின் விவரம் வருமாறு:**

**மு.குணசேகரன்:** இது ஒரு சிறப்பு விவாத நிகழ்ச்சி வரலாற்றில் ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலத்திற்கு பின்னால் சென்று நடந்த வரலாற்றை பேசக்கூடிய ஒரு கட்டாயத்தை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் ஜோசப் விஜய் இன்றைக்கு உருவாக்கியிருக்கிறார்.

ஜோசப் விஜய் சட்டமன்றத்தில் பேசும் போது பாடி லேங்வேஜ் என்று ஒரு உடல் மொழியை முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சிறுமைப்படுத்தும் வகையில் ஒன்றை வெளிப்படுத்தினார். அதற்கு கடும் கண்டனம் வெடித்தது.

மிசாவில் என்ன நடந்தது தெரியுமா? என்று ஒரு சொல்லை சொல்லிவிட்டு அவர் கடந்து போனார். அதற்கு இன்று மு.க.ஸ்டாலின் பதிலை தந்திருக்கிறார். மிசா கொடுமைகள் தொடர்பான வரலாற்றை மாற்ற முடியாது என்று அவர் சொல்லி இருக்கிறார்.

வரலாறு அறிந்தவர்களுக்கு, நெருக்கடிக்காலத்தில் ஜனநாயக செயல்பாடுகள் முடக்கப்பட்டது, அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்ட வரலாறு, பத்திரிகைகளில் இந்திரா காந்தி அம்மையார் அவர்களை எதிர்த்து நாளிதழ்கள் நெருக்கடி நிலையை எதிர்த்த பத்திரிகைகள் அன்றைக்கு அச்சிடவே முடியாமல் முன் தணிக்கை செய்யப்பட்டு, ஒன்றிய அரசாங்கத்தின் அதிகாரியிடம் காண்பித்து முன் தணிக்கைச் செய்யப்பட்ட வரலாறு என்று பல கொடுமைகள் அந்த நாளில் அரங்கேறின. கருத்தரங்கம் நடத்த முடியாது, பொதுக்கூட்டங்கள் நடத்த முடியாது, மாநாடுகள் நடத்த முடியாது. ஒரு நெருக்கடி நிலை பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது.

இன்றைக்கு ஆட்சி அதிகாரத்திற்கு வந்திருக்க கூடிய த.வெ.க. தி.மு.க. தலைவர் ஸ்டாலின் அவர்களுடைய இன்றைய எதிர்வினைக்குப் பிறகு அவர்களிடமிருந்து தவறு நடந்துவிட்டது என்றோ, அல்லது அது சார்ந்து ஒரு நாகரிகமான எதிர் வினையோ வராமல் டி.வி.கே.ஐ.டி.விங் என்ற பெயரில் ஒரு கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள்.

பல ஆண்டுகளாக கட்டமைக்கப்பட்ட சிறை சென்ற தியாகி என்ற போலி பிம்பம் உடைந்ததில் பதற்றம் பற்றிக் கொண்டதோ என்று கேட்கிறார்.

அடுத்ததாக எத்தனை நீளமாக பேசியும், இன்றைக்கு மு.க.ஸ்டாலின் அவர்கள் பேச்சை ரெபர் செய்கிற போது, எத்தனை நீளமாக பேசியும், ‘டிடென்ஷன்’ காப்பி பற்றி மட்டும் மூச்சு விடவில்லை என்றும் சொல்கிறார்கள். கட்டுமரக் கதைகளாலும், கட்டமைக்கப்பட்ட கட்டு கதைகளாலும் பொய் பிம்பம் மெய்யைத் தாக்குபிடிக்காது என்பதை நிருபித்து இருக்கிறது மு.க.ஸ்டாலின் அவர்களுடைய காணொலி.

அதாவது விஜய் சொன்னது உண்மை. மீதியெல்லாம் சிறை சென்ற தியாகி என்பதெல்லாம் போலி பிம்பம் என்று த.வெ.க. எதிர்வினையாற்றுகிறது.

இதை விமர்சனம் என்பதா அல்லது சிறுமைப்படுத்தும் முயற்சியை தொடர்கிறார்களா என்பது ஒரு கேள்வி.

இது சார்ந்து விவாதிக்க திராவிடர் விடுதலைக் கழகத்தின் விடுதலை இராஜேந்திரன் அவர்களும், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் தோழர் தியாகு அவர்களும் நம்மோடு இருக்கிறார்கள்.

நாம் இது சம்பந்தமா உரையாடப் போகிறோம். இராஜேந்திரன் அவர்களிடம் கேட்கிறோம். இந்த இரண்டு சம்பவங்களைப் பற்றி உங்க கருத்து.

**விடுதலை இராஜேந்திரன்:** எந்த சம்பவம்?

**நெறியாளர்:** விஜய் பேசிய பேச்சு, அதற்கு இன்றைக்கு மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு இருக்கக்கூடிய பதில், அதைத் தொடர்ந்து த.வெ.க.பேசி கொண்டிருக்கக் கூடிய இந்த மொழி,

**விடுதலை இராஜேந்திரன்:** விஜய் பேசிய பேச்சு அவர் படித்த அந்த ஸ்கிரிப்ட்ல. அவசர நிலை என்று ஒன்று இருக்கிறதா? என்பது அவருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ‘மிசா’ என்று ஒன்று இருக்கிறதா என்று தெரிந்ததற்கு இந்திரா காந்தி பிரதமரா இருந்த ஆட்சி காலத்தில் இந்தியா ஒன்று இருந்தது. அங்கு இந்திரா காந்தி ஆட்சி நடந்தது என்பது கூட அவருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை, ஏதோ எழுதி கொடுத்ததை வைத்து அவர் பேசி இருக்கிறார். அவர் பேசிய தன் வழியாக இன்றைக்கு அந்த வரலாறுகளை திரும்ப நினைவு கூறுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்ற முறையில் அதை வரவேற்கலாம். இருந்தாலும், நாட்டினுடைய முதலமைச்சராக அங்கீகரிக்கப்பட்ட ஒருவர் இப்படி ஒரு தரம்தாழ்ந்த ஒரு உரையை, ஒரு உடல் மொழியை செய்திருப்பது என்பது மிக மிக அவமானகரமான, தமிழ்நாட்டிற்கே தலைகுனிவைத் தரக்கூடிய ஒரு செய்தியாக மாறிவிட்டது.

உண்மையிலேயே அது ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் மிகவும் ஆழமாக அந்த செய்திகள் மிகவும் காயப்படுத்தி விட்டது. எந்த வரலாற்று அடிப்படையும் இல்லாமல், எதை வேண்டுமானாலும் பேசலாம், எப்படி வேண்டுமானாலும் பேசலாம், முதலமைச்சர் அதிகாரம் என்ற ஒரு பதவி பாதுகாப்பாக இருக்கிறது என்று அவர்கள் பேசுவது என்பது மிக மிக கீழ்த்தரமான ஒன்று.

இதற்கு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிதானமாக, ஒரு எதிர்வினையை வரலாற்று பூர்வமாக அவர் ஆற்றி இருக்கிறார். அவர்கள் பேசிய அவதூறுகள் அத்தனைக்கும் இன்றைக்கு பொதுவெளியில் சரியான மறுப்புகள் வந்து கொண்டிருக்கிறது. மிசாவில் அவர் கைது செய்யப்படவில்லை என்பதற்கு ஆதாரமாக இன்றைக்கு ‘முரசொலி’ நாளேட்டில் அந்த கைது செய்யப்பட்ட அரசு ஆணையே எடுத்து ஆதாரப்பூர்வமாக அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள். டிடென்ஷன் (Detention) ஆர்டரே போட்டு இருக்காங்க.




**நெறியாளர்:** ‘டிடென்ஷன்’ ஆர்டர் தேதிய போட்டதுக்கு அப்புறம் எப்படி இப்படி ஒரு பொய் சொல்ல முடிந்தது, சட்டசபையில் இந்த பொய்களுக்கெல்லாம் ஒரு அளவே கிடையாதா?

**விடுதலை இராஜேந்திரன்:** மிக மோசமான என்ன வார்த்தை சொல்றது என்றே தெரியவில்லை. அதனால் இதைப் பற்றி நான் என்னால எந்த ரியாக்சனும் சொல்ல முடியாத அளவுக்கு மனவேதனை இந்த சம்பவங்களால் இருந்தாலும், இந்த வரலாற்றை நாம் பார்ப்போம்.

இன்றைக்கு அவருடைய அணியில் சமூக நீதி மதசார்பற்ற அணியில் இருக்கிற காங்கிரஸ்காரர்கள், இன்றைக்கு சமூக நீதி, ஜனநாயக உரிமைகள் என்றெல்லாம் அவர்கள் பேசுகின்றவர்கள். இந்த அவசர நிலை காலத்தில் அந்த காங்கிரஸ் எப்படி இருந்துச்சு. அதனுடைய வரலாறு என்ன? இந்த அவசர நிலை ஏன் கொண்டு வரப்பட்டது. அதனுடைய பின்னணி என்ன? என்பதெல்லம் இன்றைக்கு இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய ஒரு அவசியம் இருக்குன்னு நான் நினைக்கிறேன்.

அவசர நிலை கொண்டு வரப்பட்டதற்கு முக்கியமான காரணமே இந்திராகாந்தி அம்மையார் அலகாபாத் தேர்தலில் நின்றார். அந்தத் தேர்தல் செல்லாது என்கிற ஒரு தீர்ப்பு வந்ததுக்குப் பிறகு...

**நெறியாளர்:** இந்திரா காந்தி அலகாபாத்துல எம்.பி.யா நின்று ஜெயிச்சு, பிரதமர்ன்னு சொன்னது, அங்கு ஜெயித்த எம்.பி.பதவி செல்லாது என்றும் தேர்தல் வெற்றி செல்லாது...

**விடுதலை இராஜேந்திரன்:** எதனால் செல்லாதுன்னு சொன்னது? அரசு அதிகாரம் முறைகேடாக அவர்களுடைய தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தப்பட்டது என்பது ஆவணப்பூர்வமாக நிரூபிக்கப்பட்ட காரணத்தினால், அது ஒரு எவிடன்ஸோட இருக்கிறது, வேறு வழி இல்லை அன்றைக்கு சின்காங்கிற நீதிபதி, உடனே இந்திரா காந்தி பதவி விலக வேண்டும் என்றார். இதனால் நாடு முழுவதும் போராட்டம் நடக்குது.

அந்த அம்மா பதவி விலக மறுக்கறாங்க. அந்த அம்மா பதவி விலகவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்றாங்க. அதே இந்திரா காந்தி தான், சென்னாரெட்டி ஒன்றிய அமைச்சராக இருந்த போது, அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு ஆந்திரா உயர்நிதிமன்றம், அவர் மீது ஒரு குற்றச்சாட்டை சொல்லி, பதவி விலக வேண்டும் என்று சொன்னபோது, உடனே பதவி விலகு என்று தன் சக அமைச்சரை சொன்னவர்தான் இந்திராகாந்தி.

ஆனால் தான் மட்டும் பதவி விலக முடியாது, அப்படின்னு அவங்க சொல்றாங்க. உடனே மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லி அப்பீல் ஒன்று கேட்கிறாங்க. நீதிமன்றத்துக்கு அப்பீலுக்கு போறாங்க, இதுலே இராஜினாமா செய்ய வேண்டும் என்ற இயக்கம் வலிமையாக நாடெங்கும் நடக்குது. அப்போது அப்பீலுக்கு போன வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு, அவசர நிலை பிரகடனம். திடீர்னு அவசர நிலை பிரகடனம், என்ன ஆகுதுன்னு சொன்னா, அடிப்படை உரிமைகளை முழுமையா சஸ்பெண்ட் செய்வது. அதாவது பேச்சு உரிமை, நடமாட உரிமை, கருத்து உரிமை, எல்லா உரிமையும் நிறுத்தியது, அது ஒரு சர்வாதிகாரம். ஜனநாயக அரசியல் சட்டம் வழங்கிய ஜனநயாக உரிமையை நிறுத்தி வைத்தல், அடிப்படை உரிமையை சஸ்பெண்ட் செய்வது என்கிற ஒரு ஆட்சி.

இந்திரா காந்தி தன்னுடைய தேர்தல் தோல்வி ஏற்பட்டது என்பதற்காக அதை அவங்க கொண்டு வந்தாங்க. அதை கொண்டு வந்ததுக்கு அப்புறம் அவசர நிலை பிரகடகனம் செய்ததுக்கு பிறகு, அவசர நிலை – மிசாவின் சட்டத்தின் கீழ் கைது, ஏற்கனவே இருந்த மிசா சட்டம் அந்த சட்டம், கள்ளக்கடத்தல் காரர்களையும், மத்தவங்களையும் ஒழிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட ஒரு சட்டத்தை, அரசியல் கைதிகளுக்கு எதிராக, அந்த மிசா கைது என்பது பயன்ப டுத்தப்பட்டது.

இந்த அவசர நிலை பிரகடனத்தைக் கூட முதல்ல குடியரசுத் தலைவர் வெளியிடுகிறார். அதற்கு அப்புறம் தான் அமைச்சரவையைக் கூட்டி அதற்கு ஒப்புதல் வாங்கப்படுகிறது. முன்னாடி அவசர சட்டம். அதுக்குப் பிறகு அமைச்சரவையைக் கூட்டி ஒப்புதல் வாங்கப்படுகிறது.

என்ன பண்ணாங்கண்ணா எந்தெந்த அடிப்படையில் இந்திரா காந்தினுடைய தேர்தல் செல்லாது என்று கூறப்பட்டதோ, அந்த தேர்தல் சட்டங்கள் எல்லாம் இவருக்காக சாதகமாக அத்தனையும் மாற்றி அமைத்து திருத்தி அமைக்கப்படுகிறது. அது திருத்தி அமைக்கப்படுகிற சட்டம் எப்படி இருக்குன்னு சொன்னா ரெட்ராஸ்பெக்ட் எஃக்ட் 1971ஆம் ஆண்டிலிருந்து இது செல்லும், அப்படின்னு சொல்லி திருத்தி அமைக்கப்பட்டதோடு எதிர்காலத்தில் பிரதமர் மீதோ, குடியரசுத் தலைவர் மீதோ எவரும் வழக்கே தொடர முடியாது என்ற அளவிற்கு அதை மாற்றி கொண்டார்கள்.

நாடாளுமன்றத்தினுடைய ஆயுள் காலத்தை அஞ்சு வருஷத்திலிருந்து ஆறு வருஷமாக உயர்தினாங்க, இதற்கிடையில் 42 வது அரசியல் சட்ட திருத்தம் என்ற ஒரு அரசியல் சட்டம். இதுவெல்லாம் எப்போது நடக்குது, அடிப்படை உரிமைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்ட காலத்தில் நடக்குது. பேச்சு உரிமை, கருத்து உரிமை, எழுத்து உரிமை அதை நிறுத்தி வைத்து விட்டு இவ்வளவும் நடக்கிறது.

42 வது சட்டத் திருத்தம். அதுல வந்து இரண்டு சேர்க்கப்படுகிறது. சோசலிசம், மதச்சார்பின்மை, சேர்க்கப்பட்டாலும், மாநிலங்களுக்கிடையே பல்வேறு கல்வி உரிமைகள் எல்லாம் பறிபோகிற விஷயங்கள், அந்த விஷயங்கள் எல்லாம் சேர்க்கப்படுகிறது. கொடுமையா நடந்துச்சு. மனித அடிப்படை உரிமைகளை நிறுத்தி வைத்துவிட்டு இவ்வளவு வேலைகளை செய்து கொண்டிருக்கின்ற ஒரு கொடூரமான இந்திய வரலாற்றில் இல்லாத ஒரு சர்வாதிகாரம் தான் அவசர நிலை. அதன் மீது கைது செய்யப்படுவர்களுக்கு, காரணம் எதுவும் சொல்லாமல் நீ எவ்வளவு காலமும் இருக்கலாம் என்கிறது. விளக்கம் சொல்லாம டிடென்ஷன்ல கைது பண்ணி பல பேரை போட்டாங்க.

**நெறியாளர்:** தமிழ்நாட்டுக்கு வந்துருவோம். தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின் அன்றைக்கு கைது செய்யப்பட்டார். கைது செய்யப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு வரை அவர் முதலமைச்சரின் மகன். அரசு கலைக்கப்பட்டு கைது செய்யப்படுவதற்கு முன்பு கலைஞர் முதலமைச்சராக இருக்கிறார். அந்த நாள்லே, முதலமைச்சரின் மகன், ஒரு சில நாட்களில் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படுகிறார். இது சார்ந்து சமீபத்தில் தான் அந்த சர்ச்சை வருது. போன முறை மா.பா. பாண்டியராஜன், பி.ஜே.பி பின்புலத்தில் இருந்து இந்த சர்ச்சையைத் தொடங்குறாங்க. அவர் அரசியல் காரணத்திற்காக மு.க.ஸ்டாலின் கைது செய்யப்படல, அப்படின்னு ஒன்று. சந்துரு போன்றவர்கள் அதை மறுத்தாங்க. இப்ப விஜய் த.வெ.க. அதையே ஸ்கிரிப்டோட திரும்ப வருகிறார்?

**தோழர் தியாகு:** இது தொடர்பாக நான் விரிவா எழுதினேன். இஸ்மாயில் அறிக்கை முழுவதையும் படித்து எழுதினேன், சந்துருவிடமும் கேட்டு எழுதினேன். அதைவிட கூடுதலாக 89 இல் கலைஞர், முரசொலி மாறன், ஸ்டாலின் மூன்று பேருடனும் நீண்ட நேர்காணல்கள் நடத்தி, இந்த விவரங்களை எல்லாம் நான் சரிபார்த்துக் கொண்டேன். அதுக்குப் பிறகுதான், அந்த செய்திகளை எழுதினேன். அண்மை காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு என்று ஒரு சுருக்கமான கட்டுரையும் இதை பற்றியே எழுதி இருக்கிறேன். இதுக்கும் இவங்க இப்ப எழுப்புற பிரச்சினைகளுமக்கும் தொடர்பில அந்த ஃபேக்ட் என்ன என்பதை மட்டும் நான் இப்போ சொல்ல விரும்புகிறேன்.

ஜனவரி 31, அதாவது ஜூன் 25 லிருத்து ஜனவரி 31 வரைக்கும் இந்தியா முழுவதிலும் நெருக்கடி நிலை பிரகடனம் செயல்படுத்தப்படுகிறது. மிசா சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்காணவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். ஜெயபிரகாஷ் நாராயணன், மொரார்ஜி தேசாய், அடல் பிகாரி வாஜ்பாய், லால்கிருஷ்ணன் அத்வானி, பிஜுபட் நாயக் இவ்வளவு பெரிய தலைவர்கள் சிறையில் இருந்த போது இந்திரா காந்தி பதில் சொல்றாங்க.

“இந்தியாவில் அரசியல் கைதியே இல்லை, கடத்தல்காரர்கள் தீவிர வாதிகளைத்தான் உள்ளே வச்சியிருக்கிறோம்”ன்னு பதில் சொல்லிட்டு இருக்கிறாங்க.

**நெறியாளர்:** ஆமாம், அரசியல் எதிரிகளை பழிவாங்குவதற்கு இந்த சட்டத்தை தப்பா பயன்படுத்த மாட்டோம் அப்படின்னு அன்றைக்கு சொன்னாங்க.

**தோழர் தியாகு:** 1976 ஜனவரி எட்டாம் நாள் மாநிலங்களவையில் அவங்க உரையாற்றுனாங்க. இந்திரா காந்தி, அப்போது சொல்றாங்க, இந்திய முழுவதும் ஒரே மாதிரியான உணர்வில் இருக்கிறது. இதுல விலகி நிற்கிறது குஜராத்தும், தமிழ்நாடும். குஜராத்தில் பாபுபாய்ன்னு சொல்லி ஒரு பழைய காங்கிரஸ் தலைவர் முதலமைச்சரா இருக்கிறார். தமிழ்நாட்டில் கலைஞர் இருக்கிறார். அவங்க பேரை அவங்க சொன்னது, தட்ஸ் டு பார் ஐலன்ஸ் ஆப் இன்டிசிப்ளின் ஒழுங்கின்மை தீவுகளாக இருக்கின்றன. இது சொன்னது ஜனவரி 8, ஜனவரி 31 இல் தமிழ்நாட்டைப் பொறுத்த வரைக்கும் இந்த தீவை கடல் கொண்டு போய் விட்டது, முழுகி போச்சு.

**நெறியாளர்:** எப்படி?

தோழர் தியாகு: அதான் திடீர் என்று. இது எல்லாம் எதிர்பார்த்துக்கிட்டே இருக்காங்க எதுன்னு சொன்னா, 72,73 காலத்திலிருந்தே, குறிப்பாக பீகார்ல ஜெயபிரகாஷ் நாராயணன் போராட்டம் நடத்திட்டு இருக்கிறாரு, குஜராத்தில் நவ நிர்மாண் சமீதியினுடைய போராட்டம் நடந்திட்டு இருக்கு. டோட்டல் ரெவல்யூஷன் சொல்றாங்க, சட்ட விரோத ஆணைகளுக்கு கீழ்படியா திங்கன்னு ராணுவத்துக்கும் போலீசுக்கும் ஜெயபிரகாஷ் கேட்டு கொள்றாரு. நாடெங்கும் போராட்டங்கள் பல வடிவங்களில் நடந்துகிட்டு இருக்கு. அந்த பின்னணியில் இந்த அலகாபாத் வழக்கு செய்தி வருது பாருங்க. வந்த பிறகு எதிர்க்கட்சிக்கள் எல்லாம் கூடி அவங்க பதவி விலகணும் என்று சொல்றாங்க. அதில் கலைஞர் வட நாட்டு கும்பலோடு கலந்து கொண்டார்.

கலைஞரை தூற்றுகிற மாதிரி ராமனின் எதிரி கருணாநிதின்னு சொல்லி காங்கிரஸ் பிரச்சாரம் பண்ணாங்க. இந்துத்துவா பிரச்சாரமே பண்ணாங்க, கலைஞர் எழுதினார், நான் இதுவரைக்கும் ராவணன் எதிரி ராமன்னு நினைச்சுகிட்டு இருந்தேன். என்பேர் ராவணன் இல்லைன்னு பதில் எழுதுகிறார். இந்த விஷயங்கள் எல்லாம் நடந்துக்கிட்டு இருக்கு.

தமிழ்நாட்டை பொறுத்தவரை நெருக்கடி நிலையினுடைய அந்த சூடு தெரியாமல் ஒரு சூழ்நிலை இருந்துச்சு. ஏன்னா இங்க வந்து கூட்டங்கள் நடத்த முடிஞ்சது. சி.பி.எம். தலைவர்கள் எல்லாம் வந்து வெளியில் விட்டு வச்சிருக்காங்க. ஏன்னா உலகத்திற்கு நாங்கள் எல்லோரையும் உள்ள வைக்கலைன்னு காட்டுறதுக்கு. தமிழ் நாட்டில் வந்து அவங்கலெல்லாம் கூட்டங்கள் நடத்திகிட்டு இருந்தாங்க. இதே போல சோசியலிஸ்ட் தலைவர்கள் மற்ற பல பேர் இருந்தாங்க. இப்ப இவங்களுக்கெல்லாம் தமிழ்நாடு அடைக்களம் கொடுக்கிறது, இங்கே எல்லாம் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இங்கே துண்டறிக்கைகள் வெளியிடப்படுகிறது.

இதையெல்லாம் அவங்க வந்து ஒரு குற்றச்சாட்டு சொல்றாங்க. அப்ப கலைஞர் அவர்களால் எந்த நேரமும் கலைக்கலாம்னு எதிர்பார்க்கிற, அந்த பின்னணியில்,

**நெறியாளர்:** தி.மு.க. ஆட்சியை அன்றைக்கு கலைச்சிடுவாங்கன்னு தெரியும்.

**தோழர் தியாகு:** ஆமாம், அவருக்கு தெரிந்துதான் இருக்கிறார். ஜனவரி 31 எழும்பூர் டான் பஸ்கோ ஸ்கூல் ஆண்டு விழாவில் கலைஞர் உரையாற்றினார். நான் முதலமைச்சராக கடைசியாக பேசுகிற கூட்டமாக இது இருக்கலாம்ன்னு அந்த கூட்டத்திலே சொல்கிறார்.

ஆண்டு விழா மாலை 6 மணிக்கு முடியுது. அவரும் துரைமுருகனும் ஒரு காரில் ஏறி கோபாலபுரத்துக்கு வந்த உடனே, அமிர்தமும் செல்வமும் இவரு காரை விட்டு இறங்கும் போதே சொல்றாங்க ஆட்சியை கலைச்சிட்டாங்கன்னு.

அப்பா சஸ்பென்ஸ் முடிஞ்சாச்சு? இதுதான் கலைஞர் அவர்களுடைய ரியாக்ஷன், அப்பா சஸ்பென்ஸ் முடிஞ்சாச்சா என்று சொல்லிட்டு, வாசலுக்குள் நுழைந்து படியேறுவதற்கு முன்பு திரும்பிப் பார்க்கிறார். வெளியில் அந்த அரசு காரும் டிரைவரும் நிற்கிறாங்க. திரும்பி வந்து கார் எடுத்துட்டுப் போய் செக்ரட்டரியேட்டில் விட்டுரப்பா, இனிமேல் நீ வராதே, இந்தக் காரை கொண்டு வராதே என்று சொல்லிவிட்டு படி ஏறும் போது, பாதுகாப்பு அதிகாரிகள் போலீஸ் அதிகாரிகள் இருக்காங்க. நீங்கள் எல்லாம் கூட புறப்படலாம் அப்படின்னு சொல்லிட்டு, இவர் மேலே போகிறார். போயி அப்ப எல்லாம் அந்த தரை தொலைபேசிதான், நிலத்தொலைபேசிதான். நம்ம நண்பர்களுக்கு சொல்லுவோம் என்று போனை எடுக்கிறார், போன் துண்டிக்கப்பட்டிருக்கு. லேண்ட் லைன் துண்டிக்கப்பட்டிருக்கு. முதலமைச்சர் வீட்டுக்கான லேண்ட்லைன் துண்டிக்கப்பட்டிருக்கு. அதுக்கு பிறகுதான் கீழே பார்க்கிறார், எட்டு மணி இருக்கும், போலீஸ் அதிகாரிகள் கொஞ்ச பேர் நின்னுட்டு இருக்குறாங்க. அவர் சொல்றாரு, கலைஞரே பிற்காலத்தில் எழுதுகிறார்,

எதுக்கு காத்திருக்குறீங்க?

என்னை கைது செய்யணுமா? அப்படின்னு கேட்குறாரு.

உங்களை கைது செய்ய வேண்டியதில்லை.

அப்போ, யாரை கைது செய்யணும்?

ஸ்டாலினை கைது செய்யணும் என்று சொல்கிறார்கள்.

ஐய்யா, ஸ்டாலின் வெளியூர் போயிருக்கிறான். நாளைக்கு வந்துருவான், 31 ஆம் தேதி இரவு இதெல்லாம் நடக்குது, வந்த உடனே நான் உங்களை கூப்பிட்டு சொல்றேன், வந்து அழைச்சட்டு போயிடுங்க. சொல்லிட்டு கலைஞர் அதை பற்றி எழுதுகிறார்.

இவங்க கேட்கறாங்க, நாங்க வீட்டை சோதிக்கணும்னு சொல்லி எங்களுக்கு உத்தரவு.

தாராளமாக சோதனை பண்ணுங்க, உங்க கடமையை நீங்க செய்யுங்க.

ஸ்டாலின் உள்ளே ஒளிஞ்சியிருக்காறான்னு பார்க்கறதுக்கு- சோதனை முடிச்சுட்டு, இதனை கலைஞர் எழுதுகிறார், அவர்களை வெறுங்கையோடு அனுப்ப எனக்கு மனசு கஷ்டமாக இருந்தது. என்னையாவது அவர்கள் அழைத்து போயிருக்கலாம், ஆனா என்னையும் அவர்கள் அழைச்சுட்டு போகலே என்று நகைச் சுவையோடு எழுதுறாரு.

ஸ்டாலின் அடுத்த நாள் வந்துவிடுகிறார். வந்ததற்குப் பிறகு, தம்பி ஜெயிலுக்கு போறதுக்கு ரெடியா இருந்துக்கோ என்று சொல்லிவிட்டு, சிறை போலீஸ் தலைமை அதிகாரிக்கு, இவரே தொலைபேசி செய்து, ஸ்டாலின் வந்தாச்சு, வந்து அழைச்சிட்டு போங்க என்று சொல்கிறார்.

ஸ்டாலினை அழைச்சுட்டு போறாங்க, என்ன நல்லா கவனிக்கணும்னா? மிசா காவல் உத்தரவு என்பது அந்த மாவட்ட ஆட்சியரோ. அல்லது மாவட்ட மாஜிஸ்திரேட்டோ போட்டு இந்த ‘டிடென்ஷன்’ ஆர்டர் காபியை கொடுத்து கையெழுத்து வாங்கிட்டு நேரா கொண்டு போய் ஜெயில்ல விட்டுருவாங்க இதுல கோர்ட் கிடையாது.

**நெறியாளர்:** நீதிபதி முன்பு ஆஜர் பண்றது.

**தோழர் தியாகு:** அந்த மாதிரி ரிமாண்ட ஆர்டர்யெல்லாம் வாங்க வேண்டியதில்லை. இதான் இங்க உள்ளது. ஆனால் நள்ளிரவு 12 மணி வரைக்கும் இவர ஜெயில்ல கொண்டுபோய் விடவில்லை. இது எதிலிருந்து தெரியுதுன்னா இந்த நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் நேர் நின்னு ஒரு சாட்சி சிட்டிபாபு. சிட்டிபாபுவினுடைய நாட்குறிப்பு குடும்ப விஷயங்களை நீக்கிட்டு தி.மு.க. ஒரு புத்தகமா வெளியிட்டாங்க. நான் அந்த புத்தகத்தை பெரிதும் திரும்ப திரும்ப படிச்சேன். அதை ஒட்டி கலைஞர் கிட்ட நான் நிறைய சந்தேகங்கள் கேட்டேன். சிட்டிபாபு நாட்குறிப்பில் எழுதுகிறார். ஒண்ணாம் தேதி அட்மிஷன் எடுக்கும் போதே மரியாதை குறைவா நடத்துறாங்க. இதை நம்பவே இல்லை. சிட்டிபாபு எம்.பி., பழைய மேயர், கட்சியில் முக்கியமான பொறுப்பு நீலநாரயணன் தலைமை நிலைய செயலாளர். ஆற்காடு வீராசாமி, வி.எஸ்.கோவிந்தராஜன் என்று எல்லோரும் முக்கியமான தலைவர்கள் தான்.

எல்லோரும் வந்திருக்காங்க. கிட்டத்தட்ட ஒரு 40 பேர் அந்த முதல் நாள் மட்டும் உள்ளே போனவங்க, மரியாதை குறைவாகத்தான் நடத்துனாங்க. கொண்டுபோய் எல்லோரையும் அந்த ஒன்பதாம் பிளாக்கில் அடைக்கிறாங்க. ஒன்பதாம் பிளாக் என்பது மிசா பிளாக் அங்கே வேறு கைதிகள் யாரும் இருக்க முடியாது. இப்ப புதுசா ஏற்படுத்துறாங்க. அது தொழு நோயாளிகளை வைத்திருந்த இடம். அதுல சுத்தம் செய்யப்படல. அது பூரா மூட்டைபூச்சி, கரப்பான் பூச்சியுமா இருக்கு.

அதுக்குள்ள கொண்டு போய் அடைக்கிறாங்க. ஒரு செல்லுக்கு ரெண்டு பேர் இருக்கக் கூடிய இடத்துல ஒவ்வொரு செல்லுக்கும் அஞ்சு, ஆறு, பத்து பேர் வரைக்கும், அடைச்சு வைக்கிறாங்க. சிட்டிபாபு அங்க இரவு தூங்காம உட்கார்ந்து இருக்கார். ஏன்னா உள்ளுக்குள்ளே அப்ப எல்லாம் வந்து கழிப்பறை கிடையாது. மேற்கத்திய கழிப்பறை செல்லுக்குள்ள இருக்காது. அதே ஜெயில்ல நான் 71இல் குவாரண்டைன் ஒன்னுல இருந்தேன். அங்கே எல்லாம் இவையெல்லாம் உண்டு. ஸ்பெஷல் எல்லாம் உண்டு. ஆனா, அந்த உள்ளே இருக்குற பிளாக்ல கிடையாது.

மூத்திர சட்டின்னு ஒன்னு இருக்கும். பக்கத்துலயே தண்ணி பானையும் இருக்கும். இந்த மூத்திர சட்டியில் தான், அந்த 10 பேர் இருந்தாலும் இரவு பூரா சிறுநீர் கழித்தாலும், மலம் கழித்தாலும் அதுக்குள்ளேயேதான், அடக்கிக்கிட்டு உட்கார்ந்து இருப்பாங்க. எப்ப தூங்குறாங்கன்னு சொல்லி, அந்தச் சூழ்நிலையில் சிட்டிபாபு முழுச்சுக்கிட்டு உட்கார்ந்துருக்காரு.

12 மணிக்கு யாரோ புதுசா கொண்டு வந்து அடிதண்டியில் போட்டு சாத்துகிற சத்தம் கேட்குது, என்னப்பா புதுவரவா, யாரா இருக்கும் ? யார் கிட்டேயும் கேட்கவும் பயமா இருக்கு. யாரும் மரியாதையா கூட பேச மாட்டாங்க. காலையில் ஆர்வத்தோட கதவு திறந்து உடனே பார்த்தா அதுதான் ஸ்டாலின்.!

ஒன்னாம் தேதி நள்ளிரவுல அவர ஜெயில்ல கொண்டு வந்து விட்டாங்க. பார்த்த உடனே இவர் போய் ஆற தழுவி கொண்டார். நீங்க அந்த டைமில் பார்த்தீங்கன்னு ஸ்டாலின் ஒரு பெண்ணா இருந்தா இவர் காதலிச்சிருப்பார். அவ்வளவு அற்புதமா எழுதுவார், அவருடைய அழகு, அவனுடைய புன்னகை, அவனுடைய சிரிப்பு, எல்லாத்தையும் எழுதுவார். பார்க்காம என்னால் இருக்க முடியலை தம்பி என்று எழுதுவார்.

காலையில் ராகி கூழ் கொடுக்குறாங்க. மிசா கைதிகளுக்கு நல்ல சிற்றுண்டி உண்டு, நிறைய படி உண்டு, நெய் உண்டு, புலால் உணவு உண்டு, ஆனா இவங்களுக்கு கொடுக்குறது தண்டனை கைதிகளுக்கு கொடுப்பதை விட மோசமானது. ராகி கூழ், தம்பி இதை சாப்பிடுவானோ? ஜெயிலுக்கே வந்தது இல்லையே என்று சிட்டிபாபு யோசிக்கிறார்.

ஸ்டாலின் சொல்றாரு இதெல்லாம் பழகிக்க வேண்டியதுதான். நான் சாப்பிடுகிறேன். ஒரு வேடிக்கை என்னன்னா 40 பேருக்கும் 10 தட்டு தான். இந்த 10 அலுமினியம் தட்டுக்களை சாப்பிட்டு, சாப்பிட்டு கழுவி தான் இவங்க சப்பிடனும். எல்லாம் முடிஞ்சதுக்குப் பிறகு, இவங்களை பகல்லே லாக்கப்லே அடைக்க போறாங்க எப்படி பகல்லே லாக்கப்லே அடைக்கிறீங்களே என்று பணிவோடு கேட்குறாங்க, நீங்க எல்லாம் ‘மிசா’ என்ற அந்த ஒரு பதில்தான். வேறு எதுவும்நீங்க பேசக்கூடாது.

**நெறியாளர்:** மாலை நேரத்தில் இரவில் அடைப்பதற்கு பதிலாக பகலே அடைக்குறாங்க.

**தோழர் தியாகு:** காலையிலேயே அடைக்குறாங்க. அந்த ஒன்பதாம் பிளாக்கில் அடைக்குறாங்க. அன்று இரவு 8 மணிக்குத்தான் தாக்குதல் ஆரம்பிக்குது.

சுருளிராஜன்னு ஒரு அதிகாரி, எனக்கு நல்லா தெரியும், அவர் சிறை வாத்தியாராகவும் இருந்தவர். பிற்காலத்தில் இஸ்மாயில் கமிஷன்ல அவருகிட்டேயே வாக்கு மூலம் வாங்கி நாங்கள் தாக்கல் செய்தோம்.

அந்த சுருளிரானஜன் தான் லீட் பண்ணி வராரு, ஒரு பக்கம் குற்ற காவலர்கள் கான்விக்ட் ஆர்டர்லிகள், இன்னொரு பக்கம் சிறை காவலர்கள், இவர்கள் ரெண்டு வரிசையாக அங்க நிற்கிறாங்க. ஒவ்வொரு செல்லையும் திறந்து வெளியில் வந்த உடனே காலால் உதைக்கிறது, முகத்தில் குத்திறது, தடியால் அடிக்கிறது என்று அடிச்சு நொறுக்குறாங்க சிட்டிபாபு மூணாவது கொட்டடியில் இருக்குறாங்க, இத பார்த்தா தெரியாது. ஆனா இந்த சத்தம் கேட்குது. ஆ... ஐய்யோ... அம்மான்னு..., இந்த வலியில் சத்தம் சத்தம் இவங்களை வந்து வன்மத்தோடு உதைக்கணும்டா, டேய் இவன பிடிடா, இவன பிடிடா எல்லாம் கேட்டுக்கிட்டே இருக்கிறார்.

(தொடர்ச்சி நாளை)